**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 19.08.2025</u>**

**OS.49/2014**

**பி.வா.சா.4 திரு. முத்துசாமி**

**பி.வா.சா. 4ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரண</u>**

1. நான் ஆதியில் பிறந்து வளர்ந்தது எந்த ஊர் என்றால் சோலைக்கொட்டாய். எனது அப்பா வசித்தது எங்கு என்றால் அவரும் சோலைக்கொட்டாய் தான். சோலைக்கொட்டாயில் குடியிருப்பவர்கள் எல்லாம் வேறு மாவட்டத்தில் இருந்து வந்து குடியேறி வசிப்பவர் என்றால் சரிதான். எனது நண்பர் சின்னசாமி என்று சொல்லியுள்ளேன் அவர் எந்த ஊர் என்றால் அவரும் சோலைக்கொட்டாய்தான், அவர் நண்பர் இல்லை, எனது பக்கத்து தோட்டத்துகாரர். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சின்னசாமியை நண்பர் என்று சொல்லியுள்ளேன் அது பொய்யா என்றால் பொய் இல்லை, உண்மைதான். சின்னசாமியின் அப்பா பெயர் என்ன என்றால் பச்சியப்பன், அம்மா பெயர் என்ன என்றால் நாகம்மாள். சின்னசாமி, பச்சியப்பன் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் அவர்கள் சோலைக்கொட்டாயை சேர்ந்தவர்கள் தான். பச்சியப்பன் நாகம்மாளுக்கு எங்கு வீடு இருந்தது என்றால் சோலைக்கொட்டாய் ஊரில் இல்லை, அவர்களுடைய நிலத்தில் இருந்தது.

2. அக்ராஹறரம் விளாம்பட்டி கூட்ரோட்டிற்கும், சோலைக்கொட்டாய்க்கும் 2 km தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். அந்த அக்ராஹறரம் விளாம்பட்டி கூட்ரோட்டின் அருகே பள்ளிக்கூடம் உள்ளது என்றால் உள்ளது. அந்த இடமான விளாம்பட்டி கூட்ரோட்டில் கிழக்கு மேற்காக செல்லக்கூடிய அரூர்–தருமபுரி செல்லக்கூடிய தார்சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த கூட்டுரோட்டில் அரூர்–தருமபுரி செல்லும் ரோட்டில் வடக்கு பக்கம் பச்சியப்பன், நாகம்மாளும் அந்த ரோட்டின் தெற்குபக்கம் சின்னசாமியும் வசித்து வந்தார் என்றால் அவ்வாறு அவர்கள் அங்கு வசிக்கவில்லை. சின்னசாமி அரூர் கால்நடை மருத்துவமனை எதிரில் 3 ரோட்டில் புறம்போக்கு இடத்தில் குடிசை போட்டு வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. சின்னசாமி அரூரில் வியாபாரம் செய்து வந்தார் என்றால் இல்லை. சின்னசாமி பெயரில் கேஸ் எல்லாம் இருந்தது என்றால் இல்லை. சின்னசாமி சாராயம் விற்பனை செய்ததாக அவர் மீது வழக்கு இருந்தது என்றால் இல்லை.

3. எனக்கு பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கந்தகவுண்டனூரில் உறவினர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள், எனது பெரிய அக்கா ராஜம்மாளை அந்த ஊரில் கொடுத்துள்ளோம். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மாரிமுத்து என்பவர் யார் என்றால் ஜாலியூர் காரரர் பொண்ணு, அவர் சின்னசாமிக்கு மனைவி என்று தான் தெரியும் அவர் அப்பா அம்மா யார் என்பது எல்லாம்எனக் குதெரியாது. மாரிமுத்துவிற்கும், சின்னசாமிக்கும் திருமணம் நடந்ததற்கு நான் போனானா என்றால் போனேன், திருமணம்

சோலைக்கொட்டாய் விநாயகர் கோவிலில் நடந்தது. எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் அது நடந்த 45 வருடம் இருக்கும். சின்னசாமி என்பவர் வன்னியர் சாதியை சார்ந்தவர் என்றால் சரிதான். வன்னியர் சாதியில் பெண்வீட்டில்தான் திருமணம் நடப்பது வழக்கம் என்றால் வழக்கம் உள்ளது, ஆனால் நாங்கள் திருமணம் செய்தது மாப்பிள்ளை வீட்டில்தான்.

4. ஜெயக்கொடி வீட்டு முகவரியில் சின்னசாமியின் பெயர் உள்ளதா என்றால் அதுஎல்லாம் இல்லை. நான் இந்திராணியை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எங்கு பார்த்தேன் என்றால் சந்திரானூரில் பார்த்தேன். இந்திராணிக்கு 3 பிள்ளைகள் உள்ளார் என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது, இந்திராணி மட்டும்தான் எனக்கு தெரியும். சங்கீதா, மாதேஸ், மாலதி ஆகிய குழந்தைகள் இந்திராணிக்கு உள்ளார்கள் என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது. இந்திராணியின் பிள்ளைகள் எல்லாம் விளாம்பட்டி கூட்ரோட்டில் உள்ள பள்ளியில்தான் படித்தார்கள் என்றால் அது எல்லாம் கிடையாது. தனம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவு கிடையாது, பக்கத்து காட்டை சேர்ந்தவர்.

5. என்ன சர்வே எண்ணில் சின்னசாமியிடமிருந்து தனம் கிரையம் பெற்றார் என்றால் சர்வே எண் பற்றி என்னிடம் சின்னசாமி சொல்லவில்லை. எவ்வளவு நிலம் என்று சொன்னார்களா என்றால் 2 ஏக்கர் என்று சொன்னார்கள். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெறப்பட்டது என்றால் 2 ஏக்கரும் மொத்தமாக ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு கிரையம் பேசப்பட்டது. யார் யார் கிரையம் பேசியது என்றால் நான் இருந்தேன், இன்னொருவர்

அக்ராஹரத்தை சேர்ந்த இளங்கோவோ என்னவோ என்று எனக்கு தெரியவில்லை. பேசிய நாளிலேயே கிரையம் செய்யப்பட்டதா என்றால் பேசிய நாளில் இருந்து 4, 5 நாட்கள் கழித்து தான் கிரையம் செய்யப்பட்டது. கிரையம் பேசப்பட்டநாளில் ஏதாவது தொகை கொடுக்கப்ட்டதா என்றால் பத்தாயிரமோ, இருபதாயிரமோ கொடுக்கப்பட்டது, மீதி தொகை கிரையம் அன்று கொடுக்கப்பட்டது.

6. கிரையத்திற்கு யார் பத்திரம் வாங்கியது என்றால் தனம் தான் வாங்கினார். பத்திரத்தை யார் எழுதியது என்றால் மனோகரன் என்பவர் எழுதினார். அந்த பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் நான் போட்டுள்ளேன், அக்ராஹரத்தை சார்ந்தவரும் போட்டுள்ளார். என்னை நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தது என்றால் தனம் தான் வாங்கிய நிலத்திற்கு கேஸ் உள்ளது என்று அழைத்து வந்தார். சின்னசாமி தனத்திற்கு நான் சொல்வதுபோல கிரயம் செய்து கொடுக்கவில்லை, தனம் ஜெயக்கொடி, நான், மற்றும் அக்ராஹரத்தை சார்ந்த ஒருவர் ஆகியோர் சேர்ந்து தயார் செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

6. தனம் வாங்கியதாக சொல்லும் நிலத்திற்கு 4 பக்க எல்லை என்ன என்றால் கிழக்கு பக்கம் எனது நிலம், மேற்கில் ஜெயக்கொடி நிலம், தெற்கே ஏரி, வடக்கே வீரமுத்து நிலம் உள்ளது. நான் சொல்வதுபோல செக்குபந்தியில் ஒரு நிலம் இல்லை என்றால் சரியல்ல.

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.19 17:21:26 +0530